*1972 மார்ச் 3]*

### சென்னை—மாமல்லபுரம்—செங்கற்பட்டு இருப்புப்பாதை

287. வினா—திரு. என் கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையிலிருந்து கடற்கரை ஓரமாக மாமல்லபுரம் வழியாக செங்கற்பட்டுக்கு ரயில்பாதை அமைக்க இந்த அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** மாமல்லபுரத்தை அடுத்துள்ள கல்பாக்கத்தில் அணுமின்நிலையம் அமைக்கப்படுவதாலும், சென்னையிலிருந்து மாமல்லபுரம் வரையில் புதிய குடியிருப்புகள் ஏராளமாக உருவாகி வருவதாலும் இந்த ரயில் பாதையை அமைக்க வேண்டி இனிமேலாவது நம் அரசு மத்திய அரசிடம் கோர முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஏற்கனவே பல இருப்புப் பாதைகள் போடுவதற்கு இந்த அரசு வற்புறுத்தி இருக்கிறது. அவைகள் எடுத்துக்கொள்ளப்படாத நிலையில் இவைகளை வற்புறுத்துவதால் பயன்விளையும் என்று எதிர்பார்க்கப் படவில்லை.

**திரு. கே. ஏ. வகாப் :** இதற்கு முன்பு சின்னச்சேலம்-படாளம் இடையே ஒரு ரயில் பாதையை அமைப்பதற்காக வேண்டிய சிபார்சுகளை அரசு செய்திருக்கிறதா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூலக் கேள்விக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் ? கேள்வி, சென்னை—மாமல்லபுரம்—செங்கற்பட்டு இருப்புப் பாதை பற்றியது. இதற்கும் அதற்கும் என்ன சம்பந்தம் ? அப்படிக் கேட்கக் கூடாது.